
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - [illegible] | ஜனவரி | இதழ் - 1




வெளியிடுவோர்


காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


1. "... ஜாக்கிரதையாயிருங்கள்" 1
2. "அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" 6
3. பிரிஸ்கில்லாள் 10
4. சபையை ஒருபோதும் கேலிப்பொருள் ஆக்காதீர்கள் 13
5. "வருந்திய வாலிபன்" 17
6. தேவன் இன்று எவ்வாறு பேசுகிறார் 23
7. விசுவாசிக்க வேண்டிய காரணங்கள் 27
8. இரு மனிதர்களின் கதை 29
9. "ஜீவ விருட்சங்களை" நாம் இன்று அடைய முடியும்! 31

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pute New Testament Christianity

Vol. 8 JANUARY Issue-1


## "......ஜாக்கிரதையாயிருங்கள்"

## ஆசிரியவுரை

பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள மிகப்பிரபலமான மனிதர்களில் அப்போஸ்தலனாகிய பேதுருவும் ஒருவர். குறிப்பாக, புதிய ஏற்பாட்டில் இவர் தனக்கென ஒரு முத்திரை பதித்துள்ளார். இவருடைய வாழ்க்கையில் சில ஏற்ற, இறக்கங்கள் இருந்தாலும், பிதாவாகிய தேவனால் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளார். ஆகமங்களிலும், தீர்க்க தரிசனங்களிலும் முன்னுரைக்கப்பட்ட "கிறிஸ்துவின் ராஜ்யமாகிய" சபையை, இப்பூவுலகில் ஆரம்பிக்கும், தெய்வீகப் பணியை முன்னின்று நடத்தியவர் இவரே. அப்.பவுல் மற்றும் கிறிஸ்து உட்பட வேறு எவரும் செய்யாத அளவில், ஒரே பிரசங்கத்தில் 3000 பேரை இரட்சித்த பெருமை இவரையே சாரும். (அப் 2-அதி) நமது இரட்சகரோடு மிக நெருக்கமாக இருக்கும் வாய்ப்பைப் பெற்ற மூன்று சீஷர்களில் இவரும் ஒருவர். அதுமாத்திரமல்ல, அந்நாட்களில் யூதர்களால் மிகக் கேவலமாக நடத்தப்பட்ட புறவினத்தாரை, ராஜ்யமாகிய சபைக்குள் வழிநடத்தும் வேலைக்கு தாயம் போட்டவரும் இவரே.

இப்படிப் பல சிறப்புகளுக்குச் சொந்தக்காரரான பேதுரு, இரண்டு நிருபங்களை, பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு நமக்கு எழுதிக் கொடுத்துள்ளார். அவருடைய இரண்டாம் நூலின் முதல் அதிகாரம் 10ம் வசனம், ஒரு எச்சரிப்பின் வசனமாக எழுதப்பட்டுள்ளது. "**ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்**" (2 பேதுரு 1:10) "ஜாக்கிரதை" என்பது ஒரு எச்சரிப்பின் வார்த்தை. அதாவது ஆபத்து நெருங்கி நிற்கிறது. கவனமாயிரா விட்டால் தண்டனை அல்லது அழிவு உறுதி என்பதே அதன் பொருள்.

தனது முதல் நிருபத்தில், கடுமையான சோதனைகளில் சிக்கி அல்லல்படும் கிறிஸ்தவர்களை நிலை நிறுத்தும்படியாக, விசுவாசத்தில் உறுதியாயிருக்கும் படியாய், "நம்பிக்கை" என்பதை அடிப்படையாக வைத்து எழுதும் அப்போஸ்தலன்,"அறிவு" என்பதை மூலதனமாக வைத்து தனது இரண்டாம் நிருபத்தைத் தீட்டுகிறார். தன்னுடைய மரணத்திற்கும் கொஞ்சம் முன்னதாக இதை எழுதுகிறார் (1:13). கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுடைய பொய்யான உபதேசங்களுக்கு எச்சரிக்கைய ாயிருங்கள். அவைகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள, கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் 'அறிவை' பெற்றுக்கொள்ளுங்கள், பெருக்கிக் கொள்ளுங்கள் ஏன்பதே இந்நூலின் அடிப்படை உப்தேசம்.

சரி, தன்னுடைய வாழ்நாட்காலத்தில் அநேக இடங்களில் சிதறி இருந்த, கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு கொடுத்த எச்சரிப்பானது, இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழும் நமக்கும் அப்படியே பொருந்துகிறதாய் உள்ளது.

கர்த்தரின் மிகப் பெரிதான கிருபையால், அநேகராகிய நாம் வேதாகமத்தின் அடிப்படையில் வசனங்களின் ஆதாரங்களோடு இரட்சிப்பைப் பெற்றிருக்கிறோம். இன்னும் பெரும்பாலோர் வேதாகமத்தை அறிந்தும், சுவிசேஷத்தின் நோக்கத்தைத் தெரிந்தும் இரட்சிப்பைப் பற்றிக் கவலையற்றிருக்கிறோம். இங்கே இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் அதை ஏன் உறுதி செய்து கொள்ள வேண்டுமென்றும், இரட்சிப்பைப் பற்றி அக்கறையில் லாமல், பெயர் கிறிஸ்தவர்களாக வாழ்வோர், ஏன் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் சில காரணங்களைப் பார்ப்போம்.

## I. ஏனெனில், கட்டளைகளை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது:

சர்வ வல்லவராகிய நமது தேவனுக்கு, நாம் நன்றி சொல்ல ஏராளமான காரணங்கள் உண்டு. அவைகளில் ஒன்று அவர் தன்னுடைய பிராமணங்களை, கட்டளைகளை, எதிர்பார்க்குதல்களை மனிதனுக்கு வெளிப்படுத்தியுள்ள விதம்.

ஒருவேளை விளங்காதவைகளை, புரியாதவைகளை, புரிந்தும் ஏற்றுச் செயல்படுத்த முடியாதவைகளை அவர் கொடுத்திருந்தால் நம்முடைய நிலை மிகவும் பரிதாபகரமானதாக இருந்திருக்கும்.

ஆனால், இரக்கமுள்ள நம்முடைய தேவனோ அப்படிச் செய்யவில்லை. அனைத்தையும் நாம் புரிந்துகொள்ளும்படியாக, புரிந்து அவருடைய சித்தத்திற்கு நம்மை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுக்கும்படியாகவே கொடுத்துள்ளார்.

(1) பேழையைக் கட்டும்படியாய் நோவாவைப் பணித்த தேவன், அது எவ்வாறு கட்டப்படவேண்டுமென்று மாதிரியைத் தெளிவாகக் கொடுத்தார். (ஆதி 6 : 15, 16)

(2) மோசேயின் மூலமாகப் பத்துக் கட்டளைகளையும், பிற பிரமாணங்களையும் கொடுத்த தேவன், அதைப் புரிந்து போதிக்கும்படியான அளவிலேயே கொடுத்தார் (உபா 6 : 6 , 7)

(3) தான் வாசம் செய்ய ஒரு ஆலயத்தைக் கட்டச்சொன்ன தேவன் அதன் மாதிரியை தாவீது அரசனுக்குக் காட்டினார். (1நாளா28:19)

(4) பிதாவாகிய தன்னுடைய அன்பை மானிடம் விளங்கிக் கொள்ள வேண்டுமென தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனைக் கொடுத்தார். (யோவா : 3 : 16)

(5) அந்த தேவகுமாரன் தன்னுடைய கட்டளைகளை மனிதன் கைக்கொள்கின்ற அளவிலே தான் கொடுத்துள்ளார். (யோவா14 : 21)

இன்றைக்கு நம்மைச் சுற்றிலும் உள்ள உலகத்தில் என்ன நடக்கிறது? கடவுளுக்குப் பயப்படவேண்டுமென்று விரும்பும் அநேக மக்கள், தாங்கள் வழிபடும் தெய்வம் என்ன சொல்கிறது என்று தெரியாமல், என்ன எதிர்பார்க்கிறது என்பது புரியாமல்,"பக்தி" என்ற போர்வையில், தாங்களே சில, பல காரியங்களை யூகித்துக் கொண்டு, சரீரத்தை வருத்தும் விரதங்களையும், நடை பயணங்களையும், நீண்ட பிரயாணங்களையும் மேற்கொள்கின்றனர். பாவம், அறிவிருந்தும், அறிவிலிகளாகச் செயல்படும் அந்த மக்களைப் பார்க்கப் பரிதாபமாக உள்ளது.

நண்பரே, இப்படி அவல நிலையில் உள்ள மக்களோடு ஒப்பிடும்போது நம்முடைய தேவன் நமக்குக் கொடுத்துள்ள கிருபை எவ்வளவு பெரிதென்று எண்ணிப்பாருங்கள். இம்மாபெரும் கிருபைக்காக நாம் நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதி செய்துகொள்வது மிக அவசியம்.

## II. ஏனெனில், நித்தியம் அளவில்லாதது :-

நித்தியத்தைப் பற்றிக் கவலைப்படாத ஒரு சந்ததியில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். "நித்தியம்" என்ற வார்த்தையின் பொருளை கிறிஸ்தவன், மனிதன் சரியாக உணர்ந்து கொண்டானா என்பதே சந்தேகமாக உள்ளது."நித்தியம்" என்பதும் ஒரு காலம் தான். நம்முடைய வழக்கத்தில் உள்ள காலங்களுக்கு ஒரு அளவும், முடிவும் உண்டு. ஆனால் நித்தியத்திற்கு அளவும், முடிவும் இல்லை. முடிவில்லாத காலங்களைக் கொண்டதுதான் நித்தியம்.

பரிசுத்த வேதாகமம் தேவனைப் பற்றிச் சொல்லும்பொழுது அவரை "நித்தியவாசி" என்கிறது (ஏசா 57:15) ஏரேமியா தீர்க்கனோ தேவனை, "நித்திய ராஜா" என்று சொல்கிறார். (எரே10:10) இந்த நித்திய தேவன் தான் நம்முடைய வாழ்க்கையை நித்தியத்தோடு இணைத்துள்ளார்.

உலகின் பெரும்பாலோர் எண்ணுவதைப்போல் மனிதனுடைய வாழ்க்கை இந்தப் பூமியோடு முடிவதில்லை. மரணம் தான் மனிதனின் முடிவு என்றால், வேதாகமம் அர்த்தமற்ற ஒன்றாகிவிடும். அப்போஸ்தலன் பவுல், கொரிந்தியருக்கு எழுதுவதைக் கவனியுங்கள். "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2 கொரி 5 : 10) மேலும், இயேசுக் கிறிஸ்து தமது பிரசங்கத்தில் "நித்திய ஜீவனை"க் குறித்தும், "நித்திய ஆக்கினை"யைக் குறித்தும் பேசியுள்ளார். (மத் 25 : 46)

ஆக, பரலோகத்தில் வாசம் செய்யும், நித்திய தேவன், நம்முடைய வாழ்க்கையை நித்தியத்தோடு இணைத்திருப்பதால், நாம் மறுமையை நித்தியத்தை அவரோடு கூடக் கழிக்க, நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கிக் கொள்வது மிக மிக அவசியம்.

## III. ஏனெனில் இப்பொழுது அந்தத் தருணம் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது :-

கர்த்தரின் பெரிதான கிருபையினாலும், அளவற்ற இரக்கத்தினாலும் நாம் இந்தப் புதிய ஆண்டைக் கண்டிருக்கிறோம். எத்தனையோ இராஜாக்களும், அதிபதிகளும், தலைவர்களும், ஞானிகளும், நல்லவர்களும், நீதிமான்களும், பரிசுத்தவான்களும் மறைந்து மண்ணுக்கு இரையாகியிருக்கும் பொழுது, கர்த்தர் இன்னுமொரு வருடத்தைக் கிருபையாகக் கூட்டிக்கொடுத்துள்ளார். இது நிச்சயமாக நம்முடைய நீதியினால் உண்டானதல்ல.

இந்த வருடத்திலே, இந்த மாதத்திலே, ஏன் இந்த நாளிலே நம்மை தேவனுக்கு ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கக் கூடாது. அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்குச் சொல்லும் பொழுது எவ்வளவு அவசரத்துடன் சொல்கிறார் பாருங்கள். "**இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம்; இப்பொழுதே இரட்சண்ய நாள்**" (2 கொரி 6 : 2) "இன்றே இரட்சண்ய நாள்" என்று மெத்தப்படித்த பவுல், மிகுந்த அர்த்தத்தோடே சொல்லுகிறார். இதோ அதற்குண்டான சில காரணங்கள்.

1. நாம் எப்பொழுது மரிப்போமென்று யாருக்கும் தெரியாது. நாளை என்ன நடக்குமென்பதை யாரும் அறியோம் (நீதி 27 :1)

நம்முடைய வாழ்க்கையின் நிலைப்பாட்டைக் குறித்து யாக்கோபு ஆசிரியர் இவ்விதம் சொல்கிறார். "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப் பட்டது கொஞ்சகாலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே" (யாக் 4 : 14)

2. வேதவசனங்கள் நமக்கு தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது. (2 தீமு 3 : 16, 17) அவைகளுக்குக் கீழ்ப்படியவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். (மத் 7 : 21) " தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்" என்பது தான் ஞானி சாலமோன் நமக்குத் தரும் ஆலோசனை. (பிர 12: 13) ஏனெனில் வசனமே மனிதனை இறுதிநாளில் நியாயந்தீர்க்கப்போகிறது (யோவா 12 : 48)

3. மரணமும், நியாயத்தீர்ப்பும் ஒரு மனிதனுக்கு நிச்சயமானது. இந்த இரண்டிலிருந்தும், எந்த ஒரு மனிதனும் ஒருபோதும் தப்பித்துக்கொள்ள முடியாது. (எபி 9 : 27, அப் 17 : 30, 31, 2 கொரி 5 : 10).

ஆகையால், அருமையான வாசகரே! நம்முடைய நிலையைத் தற்பரிசோதனை செய்யும்படியான வாய்ப்பை தேவன் கொடுத்துள்ளார். ஒரு வருடத்தைக் கூட்டித் கொடுத்துள்ள தேவன், நம்முடைய வாழ்க்கையிலிருந்து, எதையோ எதிர்பார்க்கிறார் என்று உணருகிறீர்கள் தானே. அது என்னவாக இருக்கும்? சாமுவேல் தீர்க்கன் சொல்லும் பொழுது ". . . . . . பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" என்று தெளிவுபடக் கூறுகிறார் (1 சாமு 15 : 22). கீழ்ப்படிந்து, அழைப்பை உறுதி செய்ய ஆயத்தமா?

ஆம், தேவன் நமக்குக் கொடுத்துள்ள தெளிவான பிரமாணங்களுக்காகவும், நித்தியம் முடிவில்லாத ஒன்றாக இருக்கிறபடியினாலும், இந்த வருடத்திலே அந்த வாய்ப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறபடியினாலும் நம்முடைய அழைப்பை உறுதி செய்வது மிக, மிக அவசியம்.

ஒருவேளை சுவிசேஷத்தின் மூலமாகக் கொடுக்கப்படும் அழைப்பை இதுகாறும் ஏற்றுக்கொள்ளாதவர்களாக இருப்போமானால், இன்றே, நம்மை அவருக்கு ஒப்புக்கொடுப்போம். நாம் ஏற்கனவே கீழ்ப்படிந்தவர்களாய் இருப்போமானால், நாம் நம்மை விழாமல் பாதுகாத்துக்கொள்வோம் (1 கொரி 10 : 12)

இவ்விதமாய் நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருப்போம். பரலோகத்தின் தேவன் அதற்குண்டான தைரியத்தையும், பெலனையும் உங்களுக்குத் தருவாராக! ஆமென்"

- EZS. ராஜநாயகம்.

# "அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்"

பரிசுத்த ஆவியானவரின் பணிபற்றிய கட்டுரைத் தொடரை அளிப்பதின் மூலம் அவர் யார், அவர் இதுவரை ஆற்றிய பணி என்ன, இன்று எத்தகைய பணியாற்றி வருகிறார் என நாம் புரிந்து கொள்ள இயலும். தயவு செய்து கவனமாக படித்து வாருங்கள். ஏனெனில், ஆவியானவரைப் பற்றியும் அவரது பணி பற்றியும் நிறைய தவறான கருத்துக்கள் நிலவுகின்றன.

பரிசுத்த ஆவியாலும் அக்கினியாலும் திருமுழுக்குக் கொடுக்கும் அதிகாரத்தை கிறிஸ்து பெற்றிருந்தார் என்பதைப் பற்றி நாம் இங்கு கவனிப்போம்.

கர்த்தருக்கு வழியை செவ்வை பண்ண யோவான் ஸ்நானகன் வந்தான் என சுவிசேஷம் நமக்குக் கூறுகிறது. வேறுவிதமாகக் கூறின், அவன் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்பும்படி போதித்து, தண்ணீரில் திருமுழுக்குக் கொடுத்து வந்தான். தேவனுக்கு முன்பாக கிறிஸ்து முற்றிலும் பரிசுத்தமானவராக இருந்த போதிலும், எல்லா நீதியையும் நிறைவேற்ற ஏதுவாக அவரும் திருமுழுக்குப் பெற யோவானிடத்தில் வந்தார். அதன் பின்னர், ஒருவன் இரட்சிக்கப்பட விசுவாசித்து திருமுழுக்குப் பெற வேண்டுமென்று போதிக்க அவருடைய அப்போஸ்தலர்களை அனுப்ப விருக்கிறார்.

கிறிஸ்துவுக்கும் தனக்கும் உள்ள வேறுபாட்டைப் பற்றி யோவான் கூறுகையில்"மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்". (யோவான் 3 : 11 -12) இப்போது, யோவான் இங்கு என்ன சொல்லிக் கொண்டிருக்கிறான்? நாம் உன்னிப்பாக இதைக் கவனித்து, இக்காரியங்களை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லையா எனப் பார்ப்போம். நிச்சயமாக,

நாம் அறிந்து கொள்ள வேண்டுமென அவர் விரும்பினார்; நாமும் நிச்சயமாக தெரிந்து கொள்ள முடியும்.

முதலாவதாக, கிறிஸ்து தன்னைவிட மிகவும் வல்லமை மிக்கவராக இருப்பார் என யோவான் காட்டுகிறான். மனந்திரும்புதலுக்கென்று தான் தண்ணீரில் திருமுழுக்குக் கொடுக்கும் போது, கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்குக் கொடுப்பார் என யோவான் கூறினான்.

பரிசுத்த ஆவியாலும் அக்கினியாலும் திருமுழுக்குப் பெறுவது பற்றி நிறைய பேசப்படுகிறது. இரண்டுமே இன்று பெற்றுக் கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. விசுவாசிகள் இன்று பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறுகின்றனர் என போதிக்கப்படுகிறது. இத்தகைய திருமுழுக்கைப் பெற்றுக் கொள்ளுவோர், அற்புதங்களைச் செய்யும் வல்லமையைப் பெறுகின்றனர் என்றும் கூறப்படுகிறது. அக்கினியால் பெறும் திருமுழுக்கு நம்மை பரிசுத்தமாக்கும் ஒருமுறை அல்லது நம்மை சோதிக்கும் ஒரு அனுபவம் என்றும், நம் வாழ்வின் ஏதாவது ஒரு கட்டத்தில் இது நடக்கிறது என்றும் போதிக்கப்படுகிறது. கர்த்தருக்கு முழுவதுமாக ஊழியஞ்செய்ய ஒரு மனிதனை இது தயார்ப்படுத்துகிறது என்று சொல்லப்படுகிறது. வேதாகமம் இவ்வாறு போதிக்கிறதா அல்லது வேறு விதமாகப் போதிக்கிறதா என்பது தான் கேள்வி.

பரிசுத்த ஆவியாலும் அக்கினியாலும் பெறப்படும் திருமுழுக்கைப் புரிந்து கொள்ள, இது பற்றிக் குறிப்பிட்டுள்ள வசனப் பகுதியை நாம் பார்ப்போம். கோதுமையை சேகரிக்கும் ஒரு விவசாயியை யோவான் படம் பிடித்துக் காட்டும் போது, கோதுமையை களஞ்சியத்தில் சேர்த்து, அதிலிருந்து பிரித்தெடுத்த பதரை அக்கினியிலே சுட்டெரிக்கிறான் என்கிறார். இப்போது, கிறிஸ்துவும் மக்களை இவ்வழியிலேயே நியாயந்தீர்ப்பார் எனக் கூறுகிறார். நல்லவர்களை பரிசுத்த ஆவியால் திருமுழுக்குச் செய்யும் வல்லமையுடன் அவர் இருப்பார். அல்லது பரிசுத்த ஆவியின் திருமுழுக்கால் ஆசீர்வதிப்பார். ஆனால் பதரையோ, அல்லது கெட்டுப்போனவர்களையோ பிரித்தெடுத்து அக்கினியில் போடுவார். வேறுவிதமாகச் சொன்னால், அவர்கள் அக்கினியில் முழுக்குப் பெறுவர். யோவான் கூறும் இரண்டு திருமுழுக்குகள் இவைகளே, ஒன்று நல்லவர்களுக்கும் மற்றது கெட்டவர்களுக்கும்.

சுவிசேஷத்தை நாம் தொடர்ந்து படிக்கையில், இயேசு அவர் புறப்படுமுன்னர், தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்களுக்கு அனுப்ப வாக்களிப்பதைப் பார்க்கிறோம் (யோவான் 14 : 26)

இந்த திருமுழுக்கைக் கொடுக்கும் வல்லமையை கிறிஸ்து மட்டுமே பெற்றிருந்தார். அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு வாக்களிக்கப்பட்டிருந்தது. பரிசுத்த ஆவியின் திருமுழுக்கால், இயேசு அவர்களுக்குப் போதித்தவைகள் அனைத்தையும் நினைவுபடுத்தும் சக்தி பெறவும், வரப்போகிற காரியங்களைப் பற்றி சத்தியத்தை உபதேசிக்கவும். அந்நிய மொழிகளில் பேசவும், அற்புதங்களைச் செய்யவும், அவர்களுக்கு முடிந்தது. தமது பிரதிநிதிகளாக தேவன் அவர்களை அனுப்பினார் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளவும், அவர்களுக்கு தேவனுடைய கற்பனைகளை அறிவிக்கவும், இந்த வல்லமையை அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதிருந்தது. இந்த வல்லமையை அவர்கள் பெற்ற பின்னர்,"அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்". (மாற்கு 16:20) என நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், எவ்வளவு காலம் இது தொடர்ந்து நடைபெற்றது? அப்போஸ்தலர்கள் அனைவரும் உயிரோடு இருக்கும் வரையில் இவ்வாறு நடந்தது. ஏனென்றால், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு வாக்குத்தத்தம் அவர்களுக்கு மட்டுமே செய்யப்பட்டிருந்தது. அப்படிப்பட்ட வேளையில், புதிய ஏற்பாடு எழுதப்பட்டு கொடுக்கப்பட்டிருந்தது; எனவே வசனத்தை உறுதிப்படுத்த அடையாளங்களும் அற்புதங்களும் இனி தேவைப்படாதிருந்தது. ஏனெனில் வசனம் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. இன்று, பலமக்கள் தாங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பதாக உரிமை கொண்டாடு கின்றனர். ஆனால், அவர்கள் ஒருவருக்கொருவர் மாற்றுக் கருத்துக்களைப் பேசுகின்றனர்; சுவிசேஷத்தில் காணப்படாத சபைகளில் அவர்கள் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்; தேவனுடைய விருப்பத்திற்கு விரோதமான செயல்களை செய்து வருகின்றனர். இப்படியிருக்கையில், தாங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருப்பதாக அவர்கள் எவ்வாறு கூறமுடியும்? உண்மை என்னவென்றால், அவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் ஏமாற்றப்பட்டிருக் கின்றனர். பல ஆத்துமாக்களை அவர்கள் ஏமாற்றுகிறார்கள்.

தேவன் பாரபட்சமற்றவர் என்பதை நிரூபிக்க (அப். 10,11) மனந்திரும்பிய புற ஜாதியான கொர்நேலியவும், அவனுடைய வீட்டாரும், அப்போஸ்தலர்களும் மட்டுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்த போதிலும் பிற எல்லா மக்களுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு வழியாக ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறார்கள்; ஏனென்றால், சத்தியத்தைப் போதிக்கவும், எழுதப்பட்ட வசனத்தைக் கொடுக்கவும் பரிசுத்த ஆவியானவரால் அப்போஸ்தலர்கள் வழி நடத்தப்பட்டனர்.

ஆனால், மற்றொரு (திரு) முழுக்கைப் பற்றி, அதாவது அக்கினி முழுக்கு பற்றி என்ன கூறுகிறீர்கள்! இதையும் நடத்த கிறிஸ்து வல்லமை உடையவராக இருக்கிறார். ஆனால் இது நல்லவர்களுக்கு அல்ல, கெட்டுப் போனவர்களுக்கு மட்டுமே. கடைசி நாளில், கெட்டவர்கள் அனைவரையும் அக்கினிக் கடலிலே கிறிஸ்து தள்ளிப்போடுவார் என வேதாகமம் கூறுகிறது. (வெளி 19 : 20, 20 : 10) பின்னர், நாம் படிக்கிறோம். "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்" (வெளி 21 : 8) அதுவே தான், இயேசு அளிக்கப்போகும் அக்கினி (திரு) முழுக்கு என யோவான் கூறினார். **அப்படியானால், அக்கினி முழுக்கு நமக்கு ஒருபோதும் வேண்டாம் என ஜெபிப்போம்.**

திருமுழுக்கு என்பது ஒரு அடக்கம். பரிசுத்த ஆவியின் திருமுழுக்கில் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர் மேல் ஊற்றப் பட்டார், அல்லது அவர்கள் பரிசுத்த ஆவியில் முழுகினார்கள். (அப் 2:1-4) கடைசி நாளிலே, கெட்டவர்கள் அக்கினி முழுக்கைப் பெறும் போது, அக்கினிக் கடலிலே அவர்கள் முழுக்கப்படுவர் அல்லது அடக்கம் செய்யப்படுவர். நாம், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்ற காலத்தை ரெம்பவும் கடந்து வந்துவிட்டோம்; அக்கினி முழுக் குக்கு ரொம்பவும் முந்திவிட்டோம் என யாரோ கூறினார்கள். ஆனால், நமது பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டி, தண்ணீர் திரு முழுக்குப் பெற, நாம் சரியான காலத்தில் வாழ்கிறோம். (அப் 2:38)

சுவிசேஷத்தின்படி, நீங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருக்கவில்லை என்பதை நான் அறிவேன். அக்கினி முழுக்கையும் நீங்கள் பெறவில்லை என்பதையும் நான் அறிவேன். ஏனெனில் அது கெட்டவர்களுக்குக் கடைசி நாளில் நடத்தப்படும் முழுக்கு ஆகும். ஆனால், கேள்வி என்னவென்றால், நீங்கள் சுவிசேஷத்தின்படி தண்ணீர் திருமுழுக்குப் பெற்றிருக்கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் தேவனை விசுவாசிக்கவும், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும், கிறிஸ்துவை தேவனின் குமாரன் என அறிக்கை செய்யவும், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட, தண்ணீரில் திருமுழுக்குப் பெறவேண்டும் என்றும் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இவ்வாறு செய்தால், கர்த்தர் உங்களை இரட்சித்து, தமது சபையில் உங்களை சேர்த்துக் கொள்ளுவார். (அப் 2:38,47) நீங்கள் கற்றுக்கொள்ளு வதிலும், கீழ்ப்படிவதிலும், நாங்கள் மேலும் உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடுமானால், தயவு செய்து எங்களுக்கு உதவுங்கள்.

**J.C. சோட்**

## பெண்கள் பகுதி

# பிரிஸ்கில்லாள்

வேதாகமத்தில் காணப்படும் உன்னதமான பெண்களின் வாழ்க்கையைப் பற்றி படிக்கும் போது, அவர்கள் கர்த்தருக்கு எவ்வாறு ஊழியஞ் செய்தார்களோ அதேபோன்று நாமும் அவருக்கு ஊழியஞ் செய்யக் கற்றுக் கொள்ளுகிறோம். பிரிஸ்கில்லாளின் முன் மாதிரியான வாழ்க்கையை நாம் இங்கு பார்ப்போம்.

அப்போஸ்தலர் பவுல் போதிப்பதற்காக மேற்கொண்ட ஒரு பயணத்தின் போது, கொரிந்து பட்டணத்தில் ஆக்கில்லா என்பவனையும், அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாள் என்பவளையும் சந்தித்தார். பவுல் இயேசு கிறிஸ்துவை மக்களுக்குப் போதித்து வரும் நாட்களில், அவரைத் தங்களுடைய வீட்டிலே தங்கிக் கொள்ள பிரிஸ்கில்லாள் அனுமதித்து அவரை உபசரித்தாள். அவளும் அவளுடைய கணவனும் தங்களுடைய வருமானத்தை பவுலுடன் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி கூடாரம் செய்யும் தொழிலை மேற்கொண்டிருந்தனர். (அப். 18 : 1-3).

பின்னர், தனது கணவனோடும் பவுலோடும் சேர்ந்து பிரிஸ்கில்லாள் எபேசு பட்டணத்திற்குச் சென்றாள். சிறிது காலத்திற்குப் பின், எபேசுவில் அவர்களை விட்டு விட்டு, பவுல் எருசலேமுக்குச் சென்றார். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் எபேசு பட்டணத்தில் தங்கியிருந்த போது, சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்பவனைச் சந்தித்தனர். அப்பொல்லோ யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை மட்டுமே அறிந்தவனாயிருந்தும், கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதித்துக் கொண்டு வந்தான். பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனை அவர்களோடு சேர்த்துக் கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். அவர்களின் போதனைகளைக் கேட்டபின், அப்பொல்லோ யூதர்களுடனே பலமாகத் தர்க்கம் பண்ணி, "இயேசுவே கிறிஸ்து என்று வேத வாக்கியங்களைக் கொண்டு" நிரூபித்தான். (அப். 18 : 24 -28).

சில காலத்திற்குப் பின்னர், ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ரோமாபுரியில் வசித்துக் கொண்டிருந்ததாகக் காண்கிறோம். கொரிந்து பட்ட

ணத்திலிருந்து பவுல் எழுதிய தனது நிருபத்தில் "கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில் லாளையும் ஆக்கில் லாவையும் வாழ்த்துங் கள்" என தனிப்பட்ட முறையில் தனது வாழ்த்துக்களை அவர்களுக்கு அனுப்புகிறார். (ரோமர் 16 : 3). கொஞ்ச காலத்திற்கு முன்பு, பவுலைக் காப்பாற்ற தங்களுடைய சொந்த வாழ்வையே ஆக்கில்லாவும் பிரிஙகில்லாளும் பணயம் வைக்க வேண்டியவர்களாயி ருந்தனர் என்பதையும் சுவிசே ஷத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளுகிறோம். எனவே தான், பவுல் மாத்தி ரமல்ல "புறஜாதிய ாரில் உண் டான சபையா ரெல்லாரும்" நன்றியுள்ளவர்களாயிருந்தனர். (ரோமர் 16 : 4).

தாராள மனதுடன் பிறரை உபசரிப்பதிலும், தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதிலும், அவசியமேற்பட்டால் சுயநல மற்று நம்மைத்தாமே அர்ப் பணிப்பதிலும், பிரிஸ் கில்லா ளின் முன் மாதிரியை நாம் இன்று பின்பற்றுவோம்.

**தமிழில் : ரேச்சல் நாயகம்.**

> **குணசாலியான ஸ்திரீ தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள் தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்கிறது.**
>
> நீதி : 31:10,26

## வெற்றிக்கு "முதல்" ஐந்துகள்

1. நாளின் 'முதல் மணி' நேரத்தை தேவனுக்குக் கொடுங்கள்
2. வாரத்தின் "முதல் நாளை" தேவனுக்குக் கொடுங்கள்.
3. வருமானத்தில் "முதல் பகுதியை" தேவனுக்குக் கொடுங்கள்
4. முடிவுகள் எடுக்கும்போது, "முதலாவது" தேவனுக்கு முன்னுரிமை கொடுங்கள்.
5. உங்கள் இருதயங்களில் "முதல் இடத்தை" தேவனுக்குக் கொடுங்கள்.

**"இப்படிச் செய்தால் பலன் உண்டு"**

# யாரெல்லாம் வேதாகமத்தைக் கற்க வேண்டும்?

| | | |
|---|---|---|
| இளைஞர்கள் | : | எப்படி ஜீவிக்க வேண்டுமென்று கற்றுக் கொள்ள |
| வயதானவர்கள் | : | எப்படி மரிக்கவேண்டுமென்று தெரிந்து கொள்ள |
| பேதைகள் | : | ஞானத்திற்காக |
| கற்றவர்கள் | : | தாழ்மைக்காக |
| ஐசுவரியவான்கள் | : | இரக்கத்திற்காக |
| ஏழைகள் | : | தேற்றப்பட |
| அனுபவசாலிகள் | : | ஆலோசனைக்காக |
| பெலவீனர்கள் | : | பெலனுக்காக |
| பலவான்கள் | : | வழிகாட்டுதலுக்காக |
| மனமேட்டிமைக்காரர் | : | எச்சரிப்புக்காக |
| எளியவர்கள் | : | உயர்த்தப்படும்படியாக |
| கலக்கமுற்றவர்கள் | : | சமாதானத்திற்காக |
| சோர்வுற்றவர்கள் | : | இளைப்பாறுதலுக்காக |
| பாவிகள் | : | இரட்சிப்புக்காக |
| சந்தேகிகள் | : | வாக்குறுதிக்காக |
| கிறிஸ்தவர்கள் | : | வழிநடத்துதலுக்காக |

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

**சங்கீதம் 119 : 105**

# சபையை ஒருபோதும் கேலிப்பொருள் ஆக்காதீர்கள்

மனிதனால் உண்டாக்கப்படும், முக்கியத்துவம் எதுவுமற்ற ஒரு அமைப்பின் மட்டத்திற்கு சபையைத் தாழ்த்திவிட இன்று மதஉலகில் பலர் முயலுகின்றனர். பரலோகத்திற்குச் செல்ல சபையில் அங்கம் வகிப்பது ஒன்றும் அவசியமில்லை என்றுகூட அவர்கள் உங்களிடம் சொல்லுவார்கள். உலகில் பல பிரிவினை சபைகள் இருப்பதால், எல்லா சபைகளும் ஒன்றே; எல்லா சபைகளும் நல்லவைகளே" என்ற கூற்றை அடிக்கடி இன்று நாம் கேட்க முடிகிறது. "எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பாருங்கள், இறுதியாக நமக்குக் கிடைப்பது தான் நாம் வேதாகமத்தில் காணும் சபை" - இது இப்படிப்பட்ட எல்லா பிரிவினை சபைகளையும் நியாயப்படுத்த சிலர் அளிக்கும் விளக்கம். கிறிஸ்து திராட்சச்செடி, வித்தியாசமான பிரிவினை சபைகள் எல்லாம் அதன் கொடிகள், என்பது யோவான் 15ம் அதிகாரத்தைப் பிடித்துக் கொண்டவர்கள் அளிக்கும் மற்றொரு விளக்கம்.

வேதனை அளிக்கும் காரியம் என்னவென்றால், சிலர் சபையை ஒரு கேலிப் பொருளாக்கி, கிண்டல் செய்து, ஒரு உதவாக்கரை கூட்டம் என அலட்சியப்படுத்துகின்றனர். இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய ஒரே சபை தான் உண்டு, சபையில் அங்கம் வகித்தால் தான் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க இயலும் என்று போதிப்பவர்கள் எல்லாம் இவர்கள் கண்களுக்கு பெரிய குற்றவாளிகளாக காட்சி தருகிறார்கள். பலதரப்பட்ட மக்களால், உலகின்பல பகுதிகளிலும், அநேகமாக 200 ஆண்டுகளுக்குள் நிறுவப்பட்ட பல பிரிவினைக் கட்டங்களால் இன்றைய மத உலகம் நிறைந்துள்ளது. அவற்றை நிறுவிய மனிதர்களின் பெயர்களையே சில சபைப் பிரிவுகள் தங்களுடைய பிரிவுகளுக்கும் வைத்துள்ளன; இன்னும் சிலர் தங்களுடைய ஆராதனை நாளையே சபையின் பெயராக்கியுள்ளனர், அல்லது அவர்களுக்கே உரிய விநோதமான சில குறிப்பிட்ட நம்பிக்கை அல்லது பழக்கத்தின் பெயரை தங்கள் சபைப் பிரிவுகளுக்கு வைத்துக் கொண்டுள்ளனர். இந்த பிரிவுகளில் அங்கத்தினராக வேண்டுமானால் அநேகவிதமான சட்ட திட்டங்களுக்கு உட்பட வேண்டும். இவர்களுடைய வித்தியாசமான ஆராதனை முறைகளில் சில விபரீதமாகவும், வேடிக்கையாகவும் உள்ளன. கற்பனை செய்யக் கூடிய பலவற்றைப் போதித்து, செயல்படுத்தி வருகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக,

இவர்கள் செய்யும் இப்படிப்பட்ட எல்லா காரியங்களுக்கும் கர்த் தருடைய அனுமதியை ஒவ் வொருவரும் எதிர்பார்ப்பதும், இவை யாவற்றையும் கிறிஸ்து வின் பெயரால் செய்வதும் தான் சகிக்க முடியாது.

கிறிஸ்தவ உலகம் என்று தன்னை அழைத்துக்கொண்டு இப்படியாக பிரிந்தும் குழம்பியும் கிடப்பது, கர்த்தரையும் அவருடைய வழியையும் கேலி செய்யும் எவ்வளவு வருத்தமான செயல்? சபைக்காக அவர் செய்த தியாகத்தையே இது சிறுமைப்படுத்தி, அவருடைய போதனையை கேலி செய்வ தாகாதா? மறுபக்கத்தில், மனிதன் காரியங்களை மாற் றியும் தலைகீழாகவும் புரட்டி வைத்திருப்பதைப் பார்த்தால், இது பெரிய வேடிக்கையைத் தவிர வேறு என்ன? முக்கிய மான காரியமாக இல்லா விட்டால், இதை வெறும் வேடிக்கையாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால், இப்படிப் பட்ட மனிதர்கள் எல்லாரும் தேவனுடைய வார்த்தையுடன் கூட்டுவதாலும் அல்லது அவற்றிலிருந்து எதையும் எடுத்துப் போடுவதாலும் அவர்கள் வீழ்ந்து போவார்கள் என்பதை உணரும்போது அது வேடிக்கையாக இல்லை (வெளி 22:18,19) இன்னும் அவர் களுடைய கள்ளப் போதகங் களைக் கேட்டு ஏமாற்றப்பட்ட பல மக்களின் வீழ்ச்சிக்கும் அவர்கள் காரணமாக இருப் பார்கள் (மத் 7 : 21 - 22).

ஒரு போதும் சபையை கேலி செய்யாதீர்கள், சிறுமைப் படுத்தாதீர்கள் அல்லது சபை முக்கியமல்ல என கூறாதீர்கள் என உங்களிடம் வேண்டிக் கொள்ளுகிறேன். வேதாக மத்தைப் படித்து, சபையைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். சபை இரட்சிப்பை அளிப் பதில்லை என்பது உண்மையே. இரட்சிக்கப்படவும் அதில் இணைக்கப்படவும், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்துள்ள மக்களால் உருவானது தான் சபை. ஆனால் கிறிஸ்துவே இரட்சிக்கிறவர். (எபே 5 : 23) அவர் சபையின் இரட்சகராக இருக்கும்போது, நாம் இரட்சிக்கப்படவும் பரலோகத்திற்குச் செல்லவும் சபையில் அங்கம் பெற வேண்டும். சந்தேகமின்றி, நான் சொல்லிக்கொண்டிருப்பது, வேதாகமத்தில் நீங்கள் படிக்கக் கூடிய ஒரே ஒரு சபையைப் பற்றி, அதாவது கர்த்தரின் சபையைப் பற்றி தான்.

சபை முக்கியமல்லவென்றோ அல்லது அதுபோன்ற அறிவிப் புகளையோ மனிதன் கூற அவனுக்குத் துணிவு எப்படி வந்தது? கிறிஸ்து சபையை உண்டாக்கினார். (மத் 16 : 18) முக்கியமற்ற ஒன்றையா அல்லது தேவையற்ற ஒன்றையா அவர் உண்டாக்கினார்? சபைக்காக கிறிஸ்து சிலுவையில் மரித்தார். (எபே 5:25) அவருடைய இரத்தத்தை சிந்தி சபையை விலைக்கு வாங்கினார். (அப் 20 : 28) அவர் வீணாக மரித்தாரா? இரத்தத்தை அவர் வீணாக சிந்தினாரா? என் நண்பர்களே,

இது பற்றி சிந்தித்துப் பாருங்கள். வேதாகமத்தில் நாம் படிக்கும் சபைக்குத் தலைவர் யார் என சிந்தியுங்கள் (கொலோ 1:18) அதன் பெயர் என்ன? (ரோமர் 16:16) எத்தனை சபைகளை கிறிஸ்து உண்டாக்கினார்? (எபே 4:4-6) என்பவற்றைச் சிந்தியுங்கள். இக்காரியங்களைப் பற்றியும், அவைகளின் பல உண்மைகளைப் பற்றியும், நீங்கள் சிந்தித்தால், ஒருவனுடைய இரட்சிப்புக்கு கிஞ்சித்தும் சம்பந்தமற்ற, முக்கியத்துவம் அற்ற, மனிதன் உருவாக்கிய ஒரு கூட்டத்தைவிட நிச்சயமாக சபையின் மேன்மையை நீங்கள் காண்பீர்கள்.

கர்த்தரையும், அவருடைய வழியையும், அவருடைய போதனையையும், அவருடைய சபையையும், அவருடைய நாமத்தையும், நாம் நேசிக்க வேண்டும். சுவிசேஷம் போதிக்கும் இரட்சிப்பு, ஆராதனை, கிறிஸ்தவ வாழ்க்கை, இரட்சிப்பு சம்பந்தப் பட்ட தேவனுடைய வாக்குத்தத்தங்கள், நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கை இவை எல்லாவற்றையும் நாம் கனம் பண்ண வேண்டும். இவைகள் எல்லாம் மிகவும் முக்கியமான காரியங்கள். ஏனெனில், இவை நமது இரட்சிப்புக்கும், நித்தியத்தில் நாம் அடையப்போகும் இடத்தைப் பற்றியுமான காரியங்கள். கர்த்தரைப் பற்றியும் அவருடைய சபையைப் பற்றியும் அவருடைய போதனைகள் பற்றியும் குற்றங்கண்டு பிடிப்பவர்கள் அதற்காக வருந்த வேண்டியது வரும். அதில் வேடிக்கை ஒன்றுமில்லை.

**J.C. சோட்**


## கைப்பிரதிகள் வேண்டுவோர் கவனத்திற்கு...

ஊழியங்களில் உபயோகிப்பதற்காக, திருமறை ஆசானிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு கட்டுரைகள் கைப்பிரதிகளாக வெளிவர உள்ளது.

மிகக் குறைந்த செலவில் உங்களுக்குப் பயன்பட ஏற்பாடு செய்துள்ளோம். தேவைப்படுவோர் கீழ்க்கண்டவாறு M.O/DD அனுப்பினால், எங்கள் செலவில் அனுப்பி கொடுக்கப்படும்.

**2 பக்க கைப்பிரதிகள் 500க்கு ரூ. 25.00 மட்டுமே**
**4 பக்க கைப்பிரதிகள் 500க்கு ரூ. 50.00 மட்டுமே**

முகவரி : சகோ. S.S. ராஜன்
கொசவப்பட்டி - 624 304
அண்ணா மாவட்டம்.

# பவுலின் எழுத்துக்களில் மிளிரும் தன்னம்பிக்கையைக் கவனியுங்கள்

"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" -
(பிளப் 4:13)

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படேன் . . . - ரோம. 1 : 16

"என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து . . . ." I தீமுத் 1 : 12

"சுவிசேஷத்திற்காக நான் உத்திரவுசொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து . . . ." பிலிப். 1 : 17

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் . . . . . ."
II தீமுத் 4 : 7

" . . . . . . இந்நாள் வரைக்கும் எல்லாவிஷயங்களிலும் நான் நல்மனசாட்சியோடே . . . . நடந்து வந்தேன் . . . "அப். 23 : 1.

". . . . என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்" - ரோம. 1 : 15

"ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் . . . . . " - II தீமுத். 1 : 12

". . . . . . . நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன் . . . . . . (II தீமுத். 4 : 6)

"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" - II தீமுத். 1 : 7.

# "வருந்திய வாலிபன்"

நமது கர்த்தராகிய இயேசுவானவர் இவ்வுலகில் வாழ்ந்தபோது பலர் பல நோக்கங்களுக்காக அவரை சந்தித்தனர். சிலர் சரீரசுகம் பெற, சிலர் வயிறாற சாப்பிட, சிலர் குற்றம் கண்டுபிடிக்க, ஆக அருள் வாழ்வுக்காக இயேசுவை எத்துணை பேர் சந்தித்தனர் என்பது ஆராய்ச்சிக்குரிய விசயம்! மத்தேயு 19:16-22 வரையுள்ள வசனப்பகுதியில் குறிப்பிடப்படும் வாலிபனுடையது ஒரு வித்தியாசமான கதாபாத்திரம்.

வியாதியஸ்தர்கள் இயேசுவை சந்தித்து சுகம் பெற்றனர். பிசாசு பிடித்திருந்தோர் இயேசுவை சந்தித்து விடுதலையடைந்தனர். குறைவிலிருந்தவர்கள் இயேசுவை சந்தித்து திருப்தியடைந்தனர். துக்கமடைந்தவர்கள் இயேசுவை சந்தித்து ஆறுதலடைந்தனர். பாவிகள் இயேசுவை சந்தித்து சமாதானம் அடைந்தனர். (மத். 15 : 30-31, 8 : 28-34, யோவா 6 : 10-13, 11 : 33 -45)ஆம், இயேசுவை சந்தித்தவர்களில் ஒருவரேனும் அவர்களுடைய பிரச்சனை தீராமல் சென்றதில்லை. ஆனால் ஐயகோ! இந்த வாலிபனோ, நல்ல சூழ்நிலையில் சமாதான பிரபுவை, ஆறுதலளிப்பவரை சந்தித்துவிட்டு துக்கமடைந்தவனாய் போய்விட்டானே! சமாதான பிரபுவை சந்தித்துமா ஒருவன் துக்கமாய் செல்ல வேண்டும்! எத்துணை வேதனை!

ஆண்டவருடன் இவன் நடத்திய உரையாடல் மூலம் இவனது மனநிலையை நாம் நன்கு அறிய முடியும். (மத் 12 : 34-35). இந்த வாலிபனுக்கு பொருள் வாழ்விலும் அருள் வாழ்விலும் நம்பிக்கை இருந்திருக்கிறது என்பது புலனாகிறது. இவன் வாலிப நாட்களில் இயேசுவைத் தேடினது, அவருடன் நித்திய வாழ்வு குறித்து உரையாடியது மிகவும் சிறப்பான ஒரு செயல்தான். ஆனால், பிசாசு எவரை விட்டு வைத்தான்!

முதலாவதாக, இவன் ஆண்டவர் இயேசுவை புகழ்ந்துரைத்தான். இயேசுவுடன் இவன் நடத்திய உரையாடல் "நல்ல போதகரே" என்ற புகழுரையுடன் துவங்குகிறது. ஆம்! இயேசு நல்ல போதகர்தான்! அது மட்டுமல்ல, அவர் அதிகாரமுடையவராயும் போதித்தார். அவர் தமது வாழ்க்கையில் சொன்னதை செய்தார். செய்ததை சொன்னார். சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளியிருக்கவில்லை. (மத்7:28 -29)

எல்லா துதி, கனம், மகிமை, புகழ் என்றும் இயேசுவுக்கே உரியது. (மத். 28 : 18 - 20, எபேசி 1 : 20 - 23) ஆண்டவர் துதிக்கப்பட வேண்டியவராயிருந்தாலும், வெறும் துதியை அல்ல, கீழ்ப்படிதலையே அவர் அதிகமாக எதிர்பார்க்கிறார்.

ஒருவனைத் தலைக்குமேல் தூக்கி வைத்து, காரியம் சாதிப்பது மனிதனுக்கு கைவந்த கலைதான். உங்களை விட்டால் எனக்கு வேறு யார் கதி! எல்லாமே நீங்கள்தான்! என்றெல்லாம் மாய்மாலத்துடன் புகழும் போது விரும்பியது கிடைக்கிறது! ஆனால் இந்த வஞ்சக விளையாட்டு ஆண்டவரிடம் எடுபடாது! ஏனெனில் அவர் மனிதனின் எண்ண அலைகளை அறிந்திருக்கிறார். (யோவா 2 : 25, மாற் 2 : 7 -8) அவர் சுய மகிமையை தேடாமல், பிதாவானவருக்கே மகிமையை செலுத்தினார்.

இது மனித சத்தமல்ல, இது தேவ சத்தம் என்ற புகழுரையை கேட்டு உள்ளம் குளிர்ந்த ஏரோது ராஜாவுக்கு விழுந்தது மரண அடி" (அப் 12 : 21 - 23)

தமக்கு கீழ்ப்படியாமல் வெறுமென புகழ்ந்துரைத்த மக்களை இயேசு கடிந்து கொண்டார். "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமல் போகிறதென்ன?" (லூக் 6 : 46).

பிதாவின் சித்தத்தை செய்யாமல், வெறும் புகழுரையால் அவருடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் என பலர் நம்பியிருப்பது பேதமை.

"பரலோகத்திலுள்ள என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.

அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன்." (மத் 7 : 21 - 23).

பிதாவின் சித்தத்தை செய்யாத பலர் இன்று பேயோட்டிகளாக ஆவி வியாபாரிகளாக உலா வருகின்றனர். வேதம் அருளாத, அதிகாரத்தை கையிலெடுத்துக்கொண்டு ஒப்பந்ததாரர்கள், குத்தகை

முகவர்கள் போல செயல்படும் இவர்கள் நம்மை ஏமாற்றுவதற்கு இன்னமும் அனுமதிக்கலாமா?

இரண்டாவதாக, நன்மை செய்வதால் நித்திய வாழ்வை அடையமுடியும் என்ற நம்பிக்கை இந்த வாலிபனுக்கு இருந்திருக்கிறது என்பது புலனாகிறது. (வச. 16)

"நீ நித்திய ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார்" இயேசு (வச 17). சன்மார்க்க வாழக்கை மூலம் நித்திய வாழ்வை அடையமுடியும் என்ற நம்பிக்கை இந்த வாலிபனுக்கு இருந்தது போல இன்றும் பலருக்கு இந்த நம்பிக்கை இருந்து வருகிறது.

"கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடி இது கிரியையினால் உண்டானதல்ல" (எபே 2 : 8 -9)

"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே மறு ஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத் 3 : 5)

இரட்சிப்பைப் பெற மனிதன் தேவ சித்தத்திற்கு கீழ்ப்படியவேண்டியுள்ளது. ஆனால் மனிதன் தன் சுய நீதியால் இரட்சிப்பை பெறவோ நித்திய வாழ்வில் பிரவேசிக்கவோ இயலாது, கொர்நெலியு தன் சுயநீதியால் இரட்சிக்கப்படவில்லை. அவர் சுவிசேஷத்திற்கு கீழ்படிய வேண்டியிருந்தது. (அப் 10 1-2, 48).

இந்த, வாலிபன் ஜீவனில் பிரவேசிக்க நான் எந்த நன்மையை செய்ய வேண்டும் என்று வினவிய கேள்வி யதார்த்தமானதாகக்கூட இருக்கலாம்! ஆனால் இது நித்திய வாழ்வை பெறுவது பற்றிய அவனுடைய தவறான எண்ணத்தையே காட்டுகிறது. இன்றும் பலர் இந்த வாலிபனைப் போல திருவசனத்தை கைக்கொள்ளாமல் சுயநீதியின் மூலம் நித்திய வாழ்வை அடையமுடியும் என நம்பியிருக்கின்றனர்! ஆண்டவர் சுய நீதியை அல்ல திருவசனத்திற்கு கீழ்படிவதையே வலியுறுத்தியுள்ளார்.

மூன்றாவதாக, இந்த வாலிபனுக்கு பாரம்பரியத்தின் மேல் நம்பிக்கை இருந்துள்ளது என்பது புலனாகிறது. "இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன், இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன" என்று அவனுடைய கேள்வி இதை உறுதிப்படுத்துகிறது. (வச 20).

பாரம்பரியம் வேறு, தேவனுடைய திருவசனம் வேறு. பாரம்பரியம் தேவ சித்தத்திற்கு எதிரானது (மத். 15 : 1 - 7) மத பக்தி,

சபை பக்தி, குரு பக்தி, பாரம்பரிய பக்தி, இவையெல்லாம் அவபக்தி, தேவன் தேவபக்தியை எதிர்பார்க்கிறார். இந்த வகை அவபக்தி தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிவதற்கு தடையாயுள்ளது. (ரோம 10 : 1 -3)

சவுல் பாரம்பரியத்தில் தீவிர ஈடுபாடுகொண்டிருந்தார் (கலா 1 : 13 - 15). இதற்காக சபையை துன்பப்படுத்தினார். நசரேனாகிய இயேசுவுக்கு விரோதமாக பலவற்றை செய்ய எண்ணியிருந்தார். (அப் 26 : 9 -11) ஆனால் தமது மதபக்தி, வைராக்கியம், பாரம்பரியம் இவை தவறானவை என்று உணர்ந்த போது உடனே தன்னை திருத்திக் கொண்டு தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிந்தார். (அப் 9 : 18, 26 : 19, கலா 1 : 15 - 17)

உங்கள் வீணான பாரம்பரியத்தை விட்டு விலகி பவுலைப்போல தேவ சித்தத்திற்கு கீழ்ப்படியும் நேர்மையும் தைரியமும் உங்களுக்கு உண்டா? இன்னும் எவ்வளவு காலம் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வீர்கள்?

நீங்கள் நம்பியிருக்கும் "புனிதர்கள் வழிபாடு," "பாவ சங்கீர்த்தனம்" உத்தரிப்பு ஸ்தல கொள்கை", குழந்தை ஞானஸ்நானம் "விசுவாசம் மட்டும் போதும்" இதையெல்லாம் ஆண்டவர் தமது வேதத்தில் கட்டளையிட்டுள்ளாரா? உங்கள் பக்தி நெறி அறிவுப்பூர்வமானதா? திருவசனத்தின் படியானதா? எண்ணிப்பாருங்கள்!

கடைசியாக, இந்த வாலிபனுக்கு சீசத்துவத்தின் விலையை செலுத்த மனமில்லாதிருந்தது என்பது தெரியவருகிறது.

இந்த வாலிபன் ஆண்டவரை பின்பற்ற விரும்பினான். நித்திய வாழ்வைப்பெற விரும்பினான். இதுவெல்லாம் நல்ல விருப்பம்தான்! ஆனால் அதற்குரிய விலையை செலுத்த இவனுக்கு மனமில்லை. இயேசுவை பின்பற்றுவது ஆசீர்வாதமானதுதான். ஆனால் அது நாம் நினைக்கிறபடி எளிதானதுஅல்ல. சுயவெறுப்பு இல்லாமல் ஒருவனும் ஆண்டவரைப் பின்பற்ற முடியாது. இயேசுவுக்காக சுயத்தை இழக்கின்றவர்கள்தான் அவருக்கு உண்மை சீடர்களாக இருக்க முடியும். அவரது பெயரைச் ஒல்லி பொருளை சுருட்டுகிறவர்கள், குவிக்கிறவர்கள் அவருக்கு உண்மை சீடராக இருக்க முடியாது. (மத் 10 : 37 - 39 லூக் 14 : 26 -27)

இந்த வாலிபனுடைய விசயத்தில், அவன் முன்னர் முறையாக ஈட்டியிருந்த செல்வத்தைப் பற்றிய எண்ணமே அவன் ஆண்டவரைப் பின்பற்றுவதற்கு தடையாக இருந்ததென்றால் செல்வத்தை ஈட்டுவதற்காகவே இயேசுவைப் பின்பற்றுகிறவர்களின் முடிவு என்னமாயிருக்கும்.

இப்போது இந்த வாலிபர் உறுதியான இறுதியான தீர்மானம் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார். (வச 21)

அவருக்கு முன்பாக ஒருபுறம் காசு: மறுபுறம் இயேசு: ஒருபுறம் பொருள் வாழ்வு : மறுபுறம் அருள் வாழ்வு! எதை தெரிந்தெடுப்பது? சற்றுநேரம் ஒரே குழப்பம்! (மத் 6 : 24) இறுதியாக முடிவெடுத்தான். தேவை இயேசு அல்ல, காசு! அருள் வாழ்வு அல்ல, பொருள் வாழ்வு ஐயகோ! என்ன தவறான தெரிவு! நொடிப்பொழுதில் மறைந்துவிடும் செல்வத்தின் பேரில் எவ்வளவு பெரிய நம்பிக்கை! விருப்பம் இருந்தால் மட்டும் போதுமா? அதற்கு விலை செலுத்த வேண்டாமா?

இதை வாசிக்கும் எனது அருமையான நண்பரே! இப்பொழுது புரிகிறதா இந்த வாலிபன் வருந்திய காரணம்! "அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையை கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய் போய்விட்டான்" (வச 22)

உங்களுடைய மனநிலை என்ன? நித்திய வாழ்வைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? கர்த்தாவே! கர்த்தாவே! என்ற புகழுரையால் நீங்கள் அதைப் பெற்றுவிட முடியுமென்று நினைக்கிறீர்களா? சுய நீதியால் நித்திய வாழ்வைப் பெற்றுவிட துடிக்கிறீர்களா? முன்னோரின் பாரம்பரியமே போதும் என இருமாப்பாயிருக்கிறீர்களா? இயேசுவுக்கு சீடனாக விரும்பியும் சுயத்தை வெறுக்க மனமின்றி தவிக்கிறீர்களா?

அந்த வாலிபனுக்கும் உங்கள் மனநிலைதான் இருந்தது. ஆனால் என்ன பரிதாபம்! சமாதான பிரபுவை சந்தித்துவிட்டு துக்கமடைந்தவனாய் போய்விட்டான்! நீங்கள் அப்படிச் செல்லவேண்டியதில்லை.

தேவன் ஒருவர் இருக்கிறாரென்றும், இயேசு தேவ குமாரனென்றும் விசுவாசியுங்கள் (எபி 11 : 6 யோவா 20 : 30 - 31). பாவங்களுக்காக மனந்திரும்பி விசுவாசத்தை அறிக்கையிடுங்கள். (அப் 17.30, 2 : 38 ரோம 10 : 9 -10, அப் 8 : 37)

திருமுழுக்குப் பெற்று, இரட்சிக்கப்பட்டு, கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக மாறுங்கள். (மாற் 16:15-16, அப் 2:38,41,47). விசுவாசத்தில் நிலைத்திருந்து நித்திய வாழ்வை பெறுங்கள் (வெளி 2 : 10).

பிரியமான நண்பரே, இதை நீங்கள் செய்யாவிட்டால், வருகையின் நாளில் ஆண்டவர் உங்களைப் பார்த்து "அக்கிரம செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்றுபோங்கள், நான் உங்களை ஒருகாலும் அறியேன்" என்பார். "அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, அவர் சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்பார் (மத் 7 : 23, 25 : 41). அப்பொழுது நீங்கள் அதிர்ச்சியுடன் கூடிய துக்கத்துடனே அவருடைய சமூகத்தை விட்டு செல்லவேண்டியிருக்கும் (2 தெச 1 : 7 -10 அப்படிச் செல்லவா விரும்புவீர்கள்?

பிரியமான சகோதரனே! நீயும் ஆதி அன்புக்கு திரும்பு! கற்பனை வாழ்க்கையை விட்டு வெளியேறு! மாய்மாலத்தை அகற்றிவிடு! சபையே! உன் மணவாளனுக்கு உண்மையாயிரு! வருகைக்காக ஆயத்தப்படு! ஆத்தும ஆதாயம் செய்வதில் தீவிரமாயிரு! கிறிஸ்தவ கிருபைகளை கூட்டிக்கொள்!

இப்படிச் செய்தால் நீ வருகையில் நாளில் வருந்தவேண்டியிருக்காது. (1 யோவா 3 : 20-21, 4 : 17 மத் 13 : 41-42). கர்த்தர் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு அளிக்கும் பலன் அவருடனே கூட வருகிறது.

வருகையின் நாளில், நீங்கள் ஆண்டவரை சந்திக்கும்போது, அவர் உங்களுக்கு என்ன சொல்வார்? அந்த வாலிபன் துக்கமடைந்தவனாய் சென்றவன். நீங்கள் அவருடைய சமூகத்தை விட்டு எப்படிப்பட்டவராக செல்வீர்கள்? சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக!

**சகோ. பால்ராஜ்**
திருச்சி

---

**13-வது சாய் நகர் வருடாந்திர கருத்தரங்கம்**

நாள் : பிப்ரவரி 13, 14, மற்றும் 15, 1995
நேரம் : காலை 9.00 - மாலை 4.00 மணி
இடம் : மத்திய அரங்கம், குமரன் நகர், சென்னை-600 082.

**-: பொருள் :-**

**"கி.பி. 2000-க்கான அநுகூலமான கதவு"**

**பேச்சாளர்கள்**

**இந்தியா, மற்றும் அயல் நாடுகளிலிருந்து**

**வருகை தருகின்றார்கள்.**

மேலும் விபரங்கட்கு : சகோ. பீட்டர் சாலமோன்
கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்
கிறிஸ்துவின் சபை
13, சாய் நகர், சென்னை - 600 082.

# தேவன் இன்று எவ்வாறு பேசுகிறார்?

தேவன் இன்று பேசுகிறாரா? ரொம்பவும் நிச்சயமாக அவர் பேசுகிறார். என்றாலும், கேள்வி என்னவென்றால், தேவன் எவ்வாறு பேசுகிறார்? பல நூற்றாண்டுகளாக விவாதிக்கப்பட்டு வரும் ஒரு கேள்வி இது. இதற்கு விடைகாண இயலுமா? இது சம்பந்தப்பட்ட அடுத்த கேள்வி. தேவன் யாரோடு பேசுகிறார்? குறிப்பிட்ட சிலரோடு மட்டுமா, அல்லது எல்லாரோடும் அவர் பேசுகிறாரா? இது தொடர்பாக, அடுத்த கேள்வி, தேவன் எவ்வாறு பேசுகிறார்? அவர் நேரிடையாக பேசுகிறாரா, சைகை மூலமாகவா அல்லது சத்தத்தினாலா, காட்சியின் வழியாகவா அல்லது கனவிலா அல்லது வேறு ஏதாவது வழியில் பேசுகிறாரா? நிச்சயமாக இதைத் தெரிந்து கொள்ள ஒரு வழி உண்டு.

இரண்டு மாறுபட்ட கனவுகள் மூலமாக தேவன் தன்னிடம் பேசியதாக ஒரு பர்மா நாட்டு சகோதரனிடம் சமீபத்தில் ஒருவர் கூறினார். இது போன்ற கதைகளை நாம் எத்தனை முறைகள் கேட்டிருக்கிறோம்? இன்னும், தேவன் தங்களோடு சத்தமாகப் பேசியிருப்பதாக, அல்லது அவருடைய விருப்பத்தை வெளிப்படுத்த தங்களுக்குக் காட்சி அளித்ததாக, அல்லது ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்ய அல்லது செய்யாதிருக்க ஒரு அடையாளத்தை தேவன் தங்களுக்குக் காட்டினார் என்றும் கூறும் எத்தனை பேரை, எவ்வளவு முறைகள் நாம் சந்தித்திருக்கிறோம்? இத்தகையக் கருத்துக்களையெல்லாம் இந்த மக்கள் எங்கிருந்து பெறுகின்றனர்? நிச்சயமாக வேதாகமத்திலிருந்து அல்ல; ஏனெனில் இப்படிப்பட்ட காரியங்களை வேதாகமம் போதிக்கிறதில்லை. அப்படியானால், இந்த மனிதர்கள் தங்களுடைய உணர்ச்சிகள், கற்பனைகள் ஆகியவற்றின் வெளிப்பாடான அறியாமையினால், அல்லது சில கள்ளப் போதகர்களின் ஏமாற்றுப் பேச்சுகளின் விளைவால் இவ்வாறு பேசுகின்றனர். தேவன் ஒருவனோடு ஏதோ வழியில் நேரிடையாகப் பேசியிருக்கிறார் என அவன் நம்பும்போது, அவன் தன்னை ஒரு முக்கியமான நபராகக் கருதிக்கொண்டு, அத்தகைய நம்பிக்கையைப் பாதுகாக்க சகல நடவடிக்கைகளை எடுக்கவும் முன் வருகிறான். நிச்சயமாக, சாத்தான் மிகவும் கபடமானவன், ஒருவனை ஏமாற்ற வேண்டி சகல வித்தைகளையும் செய்வது மட்டுமின்றி, சத்தியத்திற்கு அவனை குருடனாக்கி, எப்போதுமே அவனை ஏமாளியாக்கி வைத்திருக்கிறான். தேவன் இன்று மனிதனோடு பேசுகிறார். ஆனால் எழுதப்பட்ட வசனங்கள் வழியாக, அதாவது, சுவிசேஷம் அல்லது வேதாகமம் வழியாக, குறிப்பாக, கிறிஸ்துவின்

மரணத்திற்குப் பின்னர் வாழ்ந்தவர்களுக்கும், அவர் மீண்டும் திரும்பி வரும் வரை வாழப்போகிறவர்களுக்கும் சட்டமாகத் தரப்பட்ட புதிய ஏற்பாடு வழியாக எல்லாரோடும் ஒரே மாதிரி அவர் பேசுகிறார்.

எபிரேய எழுத்தர் கூறுகிறார், "பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்". (எபி 1 : 1, 2) இயேசு செய்த கிரியைகள் பற்றியும், அவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பவைகள் பற்றியும், நாம் படிக்கிறோம். "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவான் 20 : 30, 31) தேவனுடைய மனிதன் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாக இருக்கும்படியாக வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என பவுல் கூறுகிறார். (2 தீமோ 3 : 16 , 17) தேவனைப் பற்றி கூறும் போது, பேதுரு "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி" எனக் கூறினார் (2 பேதுரு 1 :3). அடுத்து, வசனத்துடன் நாம் எதையும் சேர்க்கவோ அல்லது அதிலிருந்து எதையும் எடுத்துப்போடவோக் கூடாது என்றும், (வெளி 22 : 18, 19) அதற்குப் பதிலாக எதையும் கூறலாகாது (கலா 1 : 6 -9) எனவும், ஆனால் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (வெளி 22 : 14) என்றும், வசனத்தின்படி நடக்கிறவர்களாக இருக்க வேண்டும் (யாக். 1 : 22) என்றும் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என பவுல் நமக்குச் சொல்லுகிறார். (ரோமர் 10 : 17) சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம் என சுவிசேஷத்தை யாக்கோபு அழைக்கிறார். (யாக். 1:25) கிறிஸ்து கூறுகிறார். "ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற் போனால் அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்க வராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே கடைசி நாளில் நியாயந் தீர்க்கும். நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேச வேண்டியவது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக்

கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடி பேசுகிறேன் என்றார்" (யோவான் 12 : 47 - 50)

மேலே கூறப்பட்ட வசனங்களிலிருந்து நமக்குத் தெரிவதென்ன? தேவன் எப்போதுமே பேசி இருக்கிறார், இந்தக் கடைசி நாட்களில் - நமது நாட்களில் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் எழுதியிருப்பதின்படி, அவருடைய குமாரன் வழியாக நம்மிடம் பேசுகிறார். கர்த்தரையும் அவருடைய விருப்பத்தையும் அறிந்து கொண்டு, அவரை விசுவாசிக்கவும் அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவும் நாம் கற்றுக் கொள்ளத்தக்கதாக அந்த வசனங்கள் எழுதப்பட்டுள்ளன. அவர் எல்லாரோடும் ஒரே மாதிரி பேசுகிறார். சகலரும் அவருடைய போதனைகளைப் படித்து, ஏற்றுக்கொண்டு கீழ்ப்படியும்போது, எல்லாரையும் ஒன்றுபோல இரட்சித்து, எல்லாரையும் அவருடைய சபையிலே சேர்க்கிறார் (அப். 2) அவருடைய வார்த்தைகள் ஒரு போதும் ஒழிந்து போவதில்லை (மத் 24 : 35) என்பதால், நியாயத்தீர்ப்பு நாளிலும் கூட அவருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும். (யோ 12:48) அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்தவர்கள் நித்திய ஜீவனை அடைவர். ஆனால் அவ்வாறு செய்யாமல் வசனத்தைப் புறக்கணித்தாலோ, அதோடு எதையும் சேர்த்தாலோ, அல்லது அதிலிருந்து எதையும் எடுத்துப்போட்டாலோ சபிக்கப்பட்டவர்களாக இருப்பர், நித்திய ஆக்கினைக்குத் தள்ளப்படுவர்.

பலர் நம்பிக்கொண்டிருப்பது போல, ஒரு மனிதனுக்கு மட்டும் கூடுதலாக ஒன்றை வெளிப்படுத்திவிட்டு, மற்றொருவனுக்கு அதை வெளிப்படுத்தாமல் கர்த்தர் மறைத்தால், அச்செயல் கர்த்தரை பாரபட்சமுள்ளவராக்கி விடும். ஒருவருக்கு மட்டும் அவர் ஒன்றைச் சொல்லி விட்டு, மற்றொருவருக்கு அதை ஏன் சொல்லாதிருக்க வேண்டும்? ஒருவரிடம் ஒருவிதமாகவும், மற்றவரிடம் வேறுவிதமாகவும் அவர் ஏன் பேசவேண்டும், இவையாவும் கர்த்தரின் பேரில் அவ நம்பிக்கையைஉம் குழப்பத்தையும் மாத்திரமே ஏற்படுத்தும்.

உண்மை என்னவென்றால், கிறிஸ்து வழியாக தேவன் அவருடைய எல்லா கற்பனைகளையும் புதிய ஏற்பாட்டு பக்கங்களில் எழுதப்பட்ட பிரகாரம் வெளிப்படுத்தியுள்ளார். எல்லாரோடும் ஒரே விதத்தில், ஒரே மாதிரியாக அவர் பேசுகிறார். சகலருக்கும் ஒரே செய்தியை அவர் அளித்துள்ளார். அவர் கூற விரும்பிய எல்லாவற்றையும், அவர் கூறிவிட்டிருக்கிறார். அதிகமாக கூறவேண்டியது ஏதாவது இருந்திருப்பின், அவர் முதலில் பேசிய வேளையிலேயே அவ்வாறு செய்திருப்பார். ஏமாந்து போகாதீர்கள்! தேவன் பேசி இருக்கிறார். இன்றும் எழுதப்பட்ட அவருடைய

வசனத்தின் வழியே பேசுகிறார். அவருடைய கற்பனைகள் விருப்பம் யாவற்றையும் பூரணமாக வெளிப்படுத்தி இருக்கிறார். அதிகமாக வெளிப்படுத்துவார் என நாம் காத்திருப்போமானால், நாம் வீணாகவே காத்திருக்கிறோம். எனவே, நாம் அவருடைய வசனத்தைக் கேட்போம்; அதை விசுவாசிப்போம், கீழ்ப்படிவோம், பின்னர், அதைப் பிறருக்குப் போதித்துக் கற்றுக் கொடுப்போம். அவ்வாறு செய்தால் மட்டுமே நாம் இரட்சிக்கப்படுவோம்.

- J.C.சோட்

# தேவன் இணைத்தவைகள்

| | | |
|---|---|---|
| 1. | பழைய புதிய ஏற்பாடுகள் தீமுத். | (II 13 : 16, 17) |
| 2. | கணவனும் மனைவியும் | (மத். 5 : 31, 32) |
| 3. | கிறிஸ்துவும் சபையும் | (எபே. 5 : 23) |
| 4. | தலையும் சரீரமும் | (கொலோ. 1: 18) |
| 5. | விசுவாசமும் ஞானஸ்நானமும் | (மாற். 16 : 16) |
| 6. | மனந்திரும்புதலும் ஞானஸ்நானமும் | (அப். 2 : 38) |
| 7. | விசுவாசமும் கிரியையும் | (யாக். 2) |
| 8. | கீழ்ப்படிதலும் இரட்சிப்பும் | (எபி. 5 : 8, 9) |
| 9. | ஆராதனையும் கர்த்தருடைய நாளும் | (அப். 20 : 7) |
| 10. | ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவும் | (எபே. 1: 3) |
| 11. | விசுவாசமும் ஜீவகிரீடமும் | (வெளி. 2 : 10) |
| 12. | மரணமும் நியாயத் தீர்ப்பும் | (எபி. 9 : 27) |

# விசுவாசிக்க வேண்டிய காரணங்கள்

நாம் எதை விசுவாசிக்கிறோம் என்பதை மாத்திரமல்ல, எதற்காக அதை விசுவாசிக்கிறோம் என்பதை அறிவதும் நம் எல்லாருக்கும் அவசியமாகிறது. நம்பிக்கை என்றால் வெறும் அபிப்பிராயமோ அல்லது ஊக்கமோ அல்ல. மாறாக, சான்றுகளைக் கொண்டு நம்மை திருப்தி அடையவைக்கும் செயல் அது.

"...... உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து, உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1 பேதுரு 3 : 15) என பேதுரு அறிவுறுத்துகிறார். நமது நம்பிக்கைக்கான காரணம் நமக்குத் தெரியவேண்டும். பிறரிடம், நமது விசுவாசத்திற்கான காரணத்தைச் சொல்ல "நாம் தயாராக இருக்கவேண்டும். தேவனை, கிறிஸ்துவை, வேதாகமம் தேவனின் வார்த்தை என்பதை விசுவாசிப்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வாறே நாம் ஏன் விசுவாசிக்கிறோம் என்று பிறருக்கு அதை எடுத்துச் சொல்லுவதும் அவ்வளவு முக்கியமானதாகும். கிறிஸ்தவ வாழ்க்கை உபதேசிப்பதை அடிப்படையாகக் கொண்டது. "நற்செய்தியை சகலருக்கும் போதியுங்கள்" என இயேசு நமக்குக் கட்டளையிட்டார் (மாற்கு 16:15,16) "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனிதர்களிடத்தில் ஒப்புவி" (2 தீமோ 2 : 2) என பவுல் கூறினார். இது போலவே சத்தியமானது தலைமுறை தலைமுறையாகப் போதிக்கப்பட்டு வருகிறது. திறமையுள்ள, விசுவாசம் நிறைந்த மக்கள் இச்செய்தியை பிறருக்கு உபதேசிக்கின்றனர். நுனிப்புல் மேய்தல் நம்மிடையே இன்று காணப்படும் ஒரு குணமாகிவிட்டது. பலர் தங்கள் அபிப்பிராயங்களைக் கூறுவர், ஆனால் ஒரு சிலர் மட்டுமே தங்கள் கூற்றை தெளிவாக அறிந்து, ஏற்றுக்கொண்டு விளக்கமளிப்பவர்களாக இருக்கின்றனர். உண்மையானவற்றைக் கற்றுக்கொள்ளுதல், பிரதிபலித்தல், புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றிற்கு முன்பு எப்போதைக் காட்டிலும், இன்று அவசியத் தேவை ஏற்பட்டுள்ளது.

தேவனின் வசனத்தைப் படிப்பது ஆத்துமாவிற்கு உணவாக இருக்கிறது. ஆவிக்குரிய உணவின்றி, நாம் தேவையான வளர்ச்சியும் விருத்தியும் அடைய இயலாது. இயேசு சொன்னார்,

"நீதியின் மெல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் . . ." (மத் 5 : 6) "திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" என பேதுரு நம்மைக் கேட்டுக் கொள்ளுகிறார். (2 பேதுரு 2 : 3) அறிவு விருத்தியடையாதிருந்த எபிரேய கிறிஸ்தவர்கள் கண்டிக்கப்பட்டனர். அவர்களுக்கு இன்னும் உபதேசங்கள் தேவையாயிருந்தன. "காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களில் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது". (எபி 5 : 12)என எபிரேய எழுத்தாளன் எழுதுகிறார்.

"விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10 : 17) எவ்வளவுக்கு அதிகமாக நாம் கற்றுக்கொண்டு, புரிந்து கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக நமது விசுவாசம் உறுதிப்படும்.

நாம் தேவனின் மக்களாக, கிறிஸ்துவைப் பின்பற்றுவோராக, புத்தகங்களிலெல்லாம் மகா புத்தகமாகிய வேதாகமத்தின் சீடர்களாக இருக்க முயலுவோம்.

**Alan E. Highers.** எஸ்.எஸ். ராஜன்.

## தேவனிடத்தில் பொய் இல்லை

**பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?**

**(எண். 23 : 19)**

**இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய் சொல்லுகிறதுமில்லை தாம் சொன்னதைப் பற்றி மனஸ்தாபப்படுகிறதுமில்லை மனம் மாற அவர் மனுஷன் அல்ல என்றான்.**

**( I சாமு. 15 : 29)**

"நாம் எப்படி?"

# இரு மனிதர்களின் கதை

அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி "நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும்? என்று கேட்டார். அதற்கு அவர், "நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள்" என்றார். அவன் அவரை நோக்கி "எவைகளை?" என்று கேட்டான். அதற்கு இயேசு, "கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக; என்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பவைகளே" என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி "இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன். இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன?" என்றான். அதற்கு இயேசு "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றி வா" என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்ட பொழுது, துக்கமடைந்தவனாகப் போய் விட்டான். (மத்தேயு 19 : 16 - 22)

இவைகளுக்குப் பின்பு, அவர் புறப்பட்டு ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவி என்னும் பேருடைய ஒரு ஆயக்காரனைக் கண்டு; "என்னைப் பின்பற்றி வா" என்றார். அவன் எல்லாவற்றையும் விட்டு, எழுந்து, அவருக்குப் பின் சென்றான். அந்த லேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்து பண்ணினான். அநேக ஆயக்காரரும் மற்றவர்களும் அவர்களோ கூடப் பந்தியிருக்கிறார்கள். (லூக்கா 5:27- 29).

இவ்விருவரில் ஏறக்குறைய யாரைப்போல நாம் இருக்கிறோம்?. இப்படிப்பட்ட வேண்டுகோளுக்கு நாம் எவ்விதப் பதிலை அளித்திருப்போம்? நாம் உணர்ந்து கொள்ளுகிறோமோ இல்லையோ, அதே வேண்டுகோளையே இன்றும் இயேசு நம்மிடம் விடுக்கிறார். இந்த இரண்டு பேர்களிலும், அவர்கள் இயேசுவுக்கு அளித்த பதில்களிலும் ஏன் இந்த வித்தியாசம்? ஒருவன் தன்னைத்தானே பார்த்தான்; மற்றவனோ இரட்சகரைப் பார்த்தான். ஒருவன் இவ்வுலகத் தேவைகளை நாடினான். அடுத்தவனோ இரட்சகரின்

தேவைகளையும், பிறருடைய தேவைகளையும் தேடினான்.

ஒருவன் நஷ்டத்தைப் பார்த்தான். மற்றவனோ ஆதாயத்தைக் கண்டான்.

ஒருவன் தனது சொத்துக்களின் இழப்பைக் கண்டான். அடுத்தவனோ, வரும் சந்தர்ப்பங்களைக் கண்டான். இவ்வுலகில் தனக்கு ஒரு அந்தஸ்தை அளித்த சொத்துக்களை ஒருவன் இழக்கத் தயாராக இல்லை. மற்றவனோ இயேசுவைப் பின்பற்றுவதில் அடையும் ஆதாயத்தை இழக்கத் தயாராக இல்லை.

ஒருவன் இன்றைய தினத்தைப் பார்த்தான். மற்றவனோ நித்தியத்தைப் பார்த்தான். ஒருவன் உடனடி சரீரத் தேவைகளை மட்டுமே கவனித்தான். அடுத்தவனோ, ஆவிக்குரிய நித்தியத் தேவைகளைக் கண்டான். ஒருவன் அழிந்து போகும் உலகப் பொருட்களை அளவற்று வைத்திருந்தான். மற்றவனோ ஒருபோதும் அழிவில்லாத உண்மை சொத்துக்களை வைத்திருந்தான்.

இரு மனிதர்களின் ஒரு கதை இது - நீங்கள் இந்த இருவரில் யார்? இயேசுவுக்கு உங்கள் பதில் என்ன? சகலவற்றையும் துறந்து விட்டு, தம்மைப்பின் செல்ல அவர் விடுக்கும் அழைப்பிற்கு உங்கள் பதில் என்ன? அவரை முன்னிருத்துவீர்களா? அல்லது சுயநல உழைப்பில், அவரை இழந்து போவீர்களா? எதைத் தேர்ந்தெடுக்கிறீர்கள்? பொறுப்பு முற்றிலும் உங்களுடையதே!

**ரோன்னி லோவ்.**

## பெற்றோரின் கடமை

**நீ உன் மகனைத் தண்டியாதிருந்தால் அவனை நேசிக்கவில்லை. நீ அவனை நேசித்தால் அவனைத் தண்டித்துத் திருத்துவாய்**

**நீதி. 13 : 24**

**உன் மகன் இளவயதுள்ளவனாயிருக்கும் போதே அவனுக்கு ஒழுங்கைக் கற்றுக்கொடு. நீ அப்படி செய்யவில்லையென்றால், அவன் அழிந்து போவதற்குக் காரணமாயிருப்பாய்.**

**நீதி. 19 : 18**

**பிள்ளையின் மனதில் மூடத்தனம் இருக்கும். சிட்சையின் பிரம்பு அதை அவனை விட்டு அகற்றும்.**

**நீதி. 22 :15**

# “ஜீவ விருட்சங்களை” நாம் இன்று அடைய முடியும்!

மனுக்குலத்தை ஆசீர்வதிக்க, ஏதேன் தோட்டத்திலே ஜீவ விருட்சம் உண்டாக்கப்பட்டிருந்ததைப் போல, நம்மையும் பிறரையும் ஆசீர்வதிக்கக் கூடிய வேறு “ஜீவ விருட்சங்கள்” பற்றி வேதாகமம் கூறுகிறது.

இன்றே இவ்விருட்சங்களை அடைந்து, அவற்றைக் கவனமுடன் வளர்த்து, அவற்றின் கனிகளைச் சுவைக்கலாம்!

ஞானம் ஒரு “ஜீவ விருட்சம்”

“ஞானத்தைக் கண்டடைகிற மனிதனும், புத்தியை சம்பாதிக்கிற மனிதனும் பாக்கியவான்கள். அதில் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது. முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப்பெற்றது; நீ இச்சிக்கத்தக்கதொன்றும் அதற்கு நிகரல்ல. அதின் வலது கையில் தீர்க்காயுசும், அதில் இடது கையில் செல்வமும் கனமும் இருக்கிறது. அதின் வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம். அது தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவவிருட்சம், அதைப் பற்றிக்கொள்ளுகிற எவனும் பாக்கியவான்” - (நீதிமொழிகள். 3:13-18) சங் 1 : 1 - 3 நீதி. 1 : 7 யாக். 1 : 5.

ஆரோக்கியமுள்ள நாவு ஒரு “ஜீவவிருட்சம்” “ஆரோக்கியமுள்ள நாவு ஜீவ விருட்சம்: நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்”- நீதி 15:4.“... ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம்” - நீதி 12 : 18

“மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்..” நீதி 18:21

“மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்”- நீதி 15 ;1

“தந்தைய ஞானம் விளங்கத் திறக்கிறான்; தயையுள்ள போதகம் அவன் நாவின் மேல் இருக்கிறது”- நீதி 31 : 26

நீதிமானுடைய பலன் ஒரு “ஜீவ விருட்சம்”

“நீதிமானுடைய பலன் ஜீவ விருட்சம் : ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்” -நீதி 11 : 30.

“ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம்,

விசுவாசம், சாந்தம், இச்சை யடக்கம் . . . . "கலா. 5 : 22, 23.

"நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர் களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" - யாக்கோப்பு 3 : 18.

**தமிழில் : எஸ். எஸ். ராஜன்.**

## ஜீவ ஊற்று

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதனிடத்தி லின்று ஜீவ ஊற்று புறப்படும்.**

**நீதி. 4 : 23**

# "கிறிஸ்தவ ஈகை"

**I கொரி. 16 : 2**

எப்பொழுது? - வாரத்தின் முதல் நாள் தோறும்

ஏன்? - பதட்டம் இல்லாமல் நான் வந்திருக்கும் போது சேர்க்குதல் இராதபடிக்கு

எவ்வளவு? - தன் தன் வரவுக்குத்தக்கதாக

என்ன கொடுப்பது? - எதையாகிலும்

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, January 1995
JAN 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## ஓர் அறிவிப்பு

கர்த்தரின் பெரிதான கிருபையால் "திருமறை ஆசான்" அலுவலகத்திற்கு தொலைபேசி இணைப்பு கிடைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டங்கள் ஒழுங்கு செய்தல், திருமணப் பதிவுக்கு அழைத்தல் போன்ற காரியங்களுக்கு கால தாமதத்தைத் தவிர்க்க, தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளலாம்.

- ஆசிரியர்

**தொலைபேசி எண் (04257) 20030**
**தபால் அனுப்ப வேண்டிய முகவரி**
**E.Z.S. ராஜநாயகம்**
**195, கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,**
**காங்கயம் - 638 701.**

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701